பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 02 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேர்வு குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி, மாணவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்புப் படைகளுக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ராணுவ தளவாடங்கள் மற்றும் விமானங்களைக் கொள்முதல் செய்ய பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

3. அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயிகள் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

5. ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம். ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்வு குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி, மாணவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு சுகந்தா மஜூம்தார் எழுதிய கட்டுரையை சமூக வலைதளத்தில் பிரதமர் பகிரந்துள்ளார்.

மாணவர்களின் நலனை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்வு பயத்தை நீக்கி கற்றல் உணர்வை கொண்டாட்டமாக இது மாற்றுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேர்வு பருவம் நெருங்கும் சூழலில் மாணவர்கள் தேர்வுகளை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று திரு நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புப் படைகளுக்கு **3** லட்சத்து **60** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ராணுவ தளவாடங்கள் மற்றும் விமானங்களைக்

கொள்முதல் செய்ய பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஃபிரான்சிடமிருந்து ரஃபேல் போர் விமானங்கள், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் பீரங்கி எதிர்ப்பு அமைப்புகள், கடற்படைக்கு உளவு விமானங்கள் உள்ளிட்டவற்றை கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயிகள் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி இது தொடர்பாக தவறான தகவல்களை தொடர்ந்து பரப்புவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

ராகுல் காந்திக்கு நாட்டின் விவசாயிகள் மீது சிறிதும் அக்கறை இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

பொய்களைப் பரப்பி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த திரு ராகுல் காந்தி முயற்சிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து விவசாயிகளின் நலனுக்கு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் ஒவ்வொரு முடிவும் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடனான ஒப்பந்தம் விவசாயிகளின் நலன்களை முழுமையாகப் பாதுகாக்கிறது என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் அடுத்த **5** ஆண்டுகளுக்குள் அணுமின் உற்பத்தியை மூன்று மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அணுசக்தி துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், **2014**ஆம் ஆண்டில் நாட்டின் அணுமின் உற்பத்தி **4** ஆயிரத்து **709** மெகாவாட்டாக இருந்தது என்றார்.

தற்போது இது 8 ஆயிரத்து 780 மெகாவாட்டாக அதிகரித்துள்ளதாக கூறினார்.

இது அடுத்த 5 ஆண்டுகளில் 22 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மகாராஷ்டிராவின் ஜெய்தாபூரில் அணுமின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது அணு உலைகள் அடுத்த ஆண்டுக்குள்ளும், 5வது மற்றும் 6வது அணு உலைகள் 2030ஆம் ஆண்டுக்குள்ளும் செயல்பாட்டுக்கு வரும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

கேராளவில் பிஜேபி சார்பில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அண்மையில் கேரளாவில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற பிஜேபி பிரதிநிதிகள் பிரதமரை நேற்று அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

திருவனந்தபுரம் மாநகராட்சியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை பிஜேபி பெற்றுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கேரள மாநிலத்தில் மக்களின் நம்பிக்கையை பிஜேபி பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

வரும் காலத்தில் கேரளாவில் பிஜேபி மேலும் வலுவடையும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1946-ம் ஆண்டு இதே நாளில் ஐநா வானொலி நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் 2012-ம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 13-ம் தேதி இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான மையக் கருத்து வானொலியும் செயற்கை நுண்ணறிவும் என்பதாகும். உலக வானொலி தினத்தையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சத்தீஸ்கரில் ராய்ப்பூர் ஆகாஷ்வாணியும், யுனெஸ்கோவும் இணைந்து, உலக வானொலி தின மாநாட்டை நடத்தவுள்ளன.

இந்தியாவில் 1936-ம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் பொதுசேவை ஒளிபரப்பு நிறுவனமாக மாறிய ஆகாஷ்வானி, பல்வேறு மொழிகளில்

பொழுதுபோக்கு நிகழ்சசிகளையும் மக்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளையும் வழங்கி வருகிறது.

நாடு முழுவதும் கட்டமைப்புகளைக் கொண்டுள்ள ஆகாஷ்வாணி, உலகின் மிகப்பெரிய ஒலிபரப்பு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

<<<<>>>>

பாரத் நெட் திட்டத்தின் மூலம் நாட்டில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகளுக்கு இணையதள இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், உலகின் மிகப்பெரிய இணையதள இணைப்புத் திட்டமாக பாரத் நெட் திகழ்கிறது என்று தெரிவித்தார்.

நாட்டில் தற்போது மொபைல் ஃபோன் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 120 கோடியை தாண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

100 கோடிக்கும் மேற்பட்டோர் இணையதளத்தை பயன்படுத்துவதாகவும் அமைச்சர் கூறினார்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 12 ஆயிரத்து 525 கிராமங்களில் சுமார் 11 ஆயிரம் கிராமங்களுக்கு பாரத் நெட் திட்டத்தின் மூலம் இணையதள இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொலைதொடர்புத்துறை தொடர்பான சில பணிகளில் தமிழகமும், மேற்குவங்கமும் தேசிய சராசரியைவிட பின்தங்கியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு 300 இடங்களுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

வாக்குப்பதிவு நிறைவடைந்தவுடன் வாக்கு எண்ணும் பணிகள் தொடங்கப்பட்டன.

இதுவரை கிடைத்த தகவலின்படி, திரு. தாரிக் ரஹ்மான் தலைமையிலான பங்களாதேஷ் தேசிய கட்சி 175 இடங்களில் முன்னணியில் உள்ளது.

ஜமாத்தே இஸ்லாமி கட்சி 60க்கும் அதிகமான இடங்களில் முன்னணியில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டு தேர்தல் ஆணையம் இன்று அதிகாரபூர்மான முடிவுகளை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

பிரேசில் அதிபர் திரு. லூயிஸ் இனாசியோ ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 18ஆம் தேதி இந்தியா வருகிறார்.

தில்லியில் 19ஆம் தேதி செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

21ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்பு பேச்சுகளை நடத்த உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமர் தங்கப் பதக்கத்தையும், நீரஜ் குமார் வெள்ளிப் பதக்கத்தையும், அகில் ஷரோன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

------------

சென்னை சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரிஜ்வல் தேவ் - நிதின் குமார் சின்ஹா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-6, 6-2, 10-8 என்ற செட் கணக்கில் இந்தியாவின் இஷாக் இக்பால் - மணீஷ் சுரேஷ் குமார் இணையை வென்றது.

--------------

பஹ்ரைனில் நடைபெற்று வரும் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நிதேஷ் குமார் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-10, 21-11 என்ற செட் கணக்கில் பிரான்சின் Mathew Thomas-ஐ வென்றார்.

------------

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் - Yashaswini Ghorpade இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-8, 11-4, 11-7 என்ற செட் கணக்கில் ரொமேனியாவின் Darius - Andreea இணையை வென்றது.

-------------

உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 93 ரன் வித்தியாசத்தில் நமீபியாவை வென்றது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற நமீபியா முதலில் பந்துவீச தீர்மானித்ததை அடுத்து பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்தது.

210 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த நமீபியா, 18 புள்ளி 2 ஓவரிலேயே ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**